செய்தி வெளியீடு எண்: 512 நாள்:20.08.2009

<u>செய்தி வெளியீடு</u>

<u>பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா – நிறைவு நாள் நிகழ்ச்சியில் பங்கேற்க மாண்புமிகு ஆந்திர மாநில முதலமைச்சர் டாக்டர் ராஜசேகர ரெட்டி அவர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அழைப்பு</u>

பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா – நிகழ்ச்சிகளை தமிழக அரசு சிறப்பாக நடத்தி வருகிறது. பேரறிஞர் அணணா நூற்றாண்டு விழா நிறைவு நாள் நிகழ்ச்சியில் பங்கேற்று உரையாற்றிட மாண்புமிகு ஆந்திர மாநில முதலமைச்சர் டாக்டர் ராஜசேகர ரெட்டி அவர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கடிதம் மூலம் அழைப்பு விடுத்துள்ளார்கள்.

இன்று (20.08.2009) மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதிஇளம்வழுதி அவர்கள் ஆந்திர மாநிலம் ஹைதராபாத் சென்று மாண்புமிகு ஆந்திர மாநில முதலமைச்சர் டாக்டர் ராஜசேகர ரெட்டி அவர்களை நேரில் சந்தித்து சால்வை அணிவித்து பூங்கொத்து அளித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களின் அழைப்பு கடிதத்தினை அளித்து பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா நிறைவு நாள் நிகழ்ச்சியில் பங்கேற்குமாறு கேட்டுக் கொண்டார்கள்.

இந்நிகழ்வில் தமிழ் வளர்ச்சி , அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை செயலர் திரு. க. முத்துசாமி இஆப., செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. சி. காமராஜ் இஆப., ஆகியோர் உடன் இருந்தனர்.

*************

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9